மாலை முரசு

பக்கங்கள் 17

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஐப்பசி 17 சனிக்கிழமை 04.11.2023 அதிர்வு 96

## யாழ். நூலகம் ஏன் தீப்பற்றி எரிந்தது?

### கேள்வி எழுப்பிய நிர்மலா சீதாராமன் மழுப்பலாகச் சிரித்த ஆணையாளர்

- பிரபாகரன் டிலக்சன் -

யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தில் இருந்த பல்லாயிரக்கணக்கான நூல்கள் தீப்பற்றி எரிந்தமைக்கான காரணம் 04

# தமிழர்களுக்குத் தீர்வு வழங்குவாராம் ரணில்

## நிர்மலாவிடமும் அவர் எடுத்துரைத்தாராம்



- சுடர் திலீபன் -

"இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் தேசிய ரீதியில் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளு மன்றத்தின் அங்கீகாரத்துடன் நிலையான தீர்வை வழங்கியே தீருவார். இதை இலங்கை வந்திருந்த இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனிடமும் ஜனாதிபதி கூறியுள்ளார்."

- இவ்வாறு தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதி பதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார். 04

## இஸ்ரேலில் மேலுமொரு இலங்கைப் பிரஜை சாவு



இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையிலான மோதலில் இலங்கையைச் சேர்ந்த மேலுமொருவர் உயி ரிழந்துள்ளார்.

48 வயதான சுஜித் பண்டார யத்வார என்பவரே உயி ரிழந்துள்ளார் என்று இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதரகம் இன்று தெரிவித்துள்ளது. 04

## 'லிட்ரோ' விலைகள் இன்று முதல் உயர்வு

லிட்ரோ சமையல் எரிவாயு கொள்கலன்களின் விலைகளை இன்று நள்ளிரவு முதல் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

லிட்ரோ நிறுவனத்தின் தலைவர் முதித்த பீரிஸ் இந்த அறிவித் தலை விடுத்துள்ளார்.

இதற்கமைய, 12.5 கிலோ கிராம் எடையுள்ள சமையல் எர வாயு கொள்கலனின் விலை 95 ரூபாவால் அதிகரித்துள்ள நிலையில், புதிய விலை 3 ஆயிரத்து 565 ரூபா என அறிவிக்க-ப்பட்டுள்ளது




5 கிலோ கிராம் எடையுள்ள சமையல் எரிவாயு கொள்கல னின் விலை 38 ரூபா வால் அதிகரிக்கப்பட்டு புதிய விலை 04

## காஸா மீதான தாக்குதலை உடன் நிறுத்து!

### வவுனியாவில் கவனவீர்ப்புப் போராட்டம்

- வவுனியா நிருபர் -

பலஸ்தீன – காஸா மீது இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலை உடன் நிறுத்துமாறு வலியுறுத்தி வவுனியாவில் கவனவீர்ப்புப் போராட்டம் முன் னெடுக்கப்பட்டது.

வவுனியா பழைய பஸ் நிலையம் முன்பாக சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் ஏற்பாட் டில் இன்று இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், "சுதந்திர பலஸ் தீனத்தை அழிக்காதே, அமெரிக்க, இஸ்ரேல் போர் – ஆக்கிரமிப்பு யுத்தம் வேண்டாம், 04





# சம்பிக்க ரணவக்க எம்.பி. கிழக்குக்கு!

ஐக்கிய குடியரசு முன்னணியின் கிழக்கு மாகாண இளைஞர் அமைப்பாளர் என்.எம். எம்.மர்சூக்கின் அழைப்பின் பேரின் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களுக்கு விஜயம் செய்துள்ள ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் நாடாளு மன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க பிறைந்துரைச்சேனை அஸ்ஹர் மகா வித்தியாலயத்துக்கும் விஜயம் மேற்கொண்டார்.

இதன் போது, அதிபரின் தலைமையில் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், ஆசிரியர்கள் மற்றும் பிரதிநிதிகளுடன் சிநேக பூர்வமாக சந்திப்பும் உரையாடலும் இடம்பெற்றது.



# ஹெரோயின் போதைப் பொருளுடன் பொலிஸ் உட்பட 9 பேர் கைதாகினர்!

மாத்தறை ஹக்மான தெனகம பிர தேசத்தில் 7,140 மில்லிகிராம் பெறுமதி யான 34 ஹெரோயின் போதைப் பொருள் பொதிகளுடன் பொலிஸ் உத்தி யோகத்தர் உட்பட 9 பேர் சந்தேகத்தின் பேரில் நேற்று வெள்ளிக்கிழமை (03) கைது செய்யப்பட்டுள்ளனர்.

அங்கு இடம்பெற்ற விசேட சுற்றி வளைப்பின் போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் தெய்யந்தர பொலிஸ் நிலையத்தில் கடமையாற் றுபவராவார் என்று தெரிவிக்கப்பட் டுள்ளது.

ஹக்மன பொலிஸ் நிலைய அதிகா ரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் தெனகம பிரதேசத்தில் நேற்று விசேட சுற்றிவளைப்பு நடவ டிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த சோதனையின் போது பொலிஸ் உத்தியோகத்தரின் வீட்டில் 3,150 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளும், ஏனைய சந்தேக நபர்களி டம் இருந்து மேலும் 3,990 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளும் பொலிஸாரால் மீட்கப்பட் டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலி ஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். சந்தேக நபர்கள் தெய்யந்தர மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தவுள்ளனர்.

# குருநாகல் விபத்தில் மாணவி உயிரிழப்பு!

குருநாகல், தலதாகம்மன – கெபிலிதிகொடவல விகாரைக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் பாடசாலை மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று மாவத்தகம பொலிஸார் தெரி விக்கின்றனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் அத்தபத்து முல பிரதேசத்தை சேர்ந்த ஹிமாயா கருணாரத்ன என்ற 16 வயதுடைய பாடசாலை மாணவி ஆவார்.

இவர் தனது தாயாருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த போது மோட்டார் சைக்கிள் வீதியில் கவிழ்ந்துள்ளது. இந்நிலையில் எதிரில் வந்த பஸ் ஒன்று மோட்டார் சைக்கிள் மீது மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் தாய் மற்றும் மகள் ஆகிய இருவரும் காயமடைந்த நிலையில் குருநாகல் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். பின்னர் மகள் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். தாய் தீவிர சிகிச்சை பெற்று வருகிறார் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த விபத்து தொடர்பில் மாவத்தகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மன்னார் மாவட்ட வைத்தியசாலை வடக்கில் புறக்கணிக்கப்பட்டுள்ளது

## நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன் தெரிவிப்பு

(மன்னார் நிருபர்)

வடமாகாணத்தில் உள்ள வைத்திய சாலைகளுக்குள் கட்டட ரீதியாகவும், ஆளணித்துவ ரீதியாகவும், அதேநேரம் சிகிச்சை உபகரணங்கள் ரீதியாகவும் மன்னார் மாவட்ட வைத்தியசாலை மிகவும் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும் வவுனியா அபிவிருத்தி குழுவின் தலைவருமான கே.திலீபன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மன்னார் பொது வைத்தியசாலையில் குறைபாடுகள் தொடர்பில் பார்வையிடுவதற்காக நேற்று (3) மாலை நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன் மன்னார் பொது வைத்தியசாலைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன் போது மன்னார் பொது வைத்தியசாலையின் உதவிப் பணிப்பாளர் வைத்தியர் யோகேஷ்வரனுடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டார். வைத்தியசாலையின் குறைபாடுகள் தொடர்பில் நேரடியாகப் பார்வையிட்டார்.

அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –



மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் பல்வேறு குறைபாடுகள், வள பற்றாக்குறைகள் காணப்படுகின்றன. இருந்த போதிலும் பல சிரமங்களுக்கு மத்தியில் வைத்தியர்கள் மக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்கி வருகின்றனர்.

ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் முன்னுரிமை அடிப்படையில் மன்னார் வைத்தியசாலையில் தீர்க்கப்பட வேண்டிய முக்கிய பிரச்சினைகளுக்கான தீர்வை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசில் என்னால் பெற்று தர முடியும் என்று நம்புகிறேன்.

இம்மாதம் மற்றும் வருகின்ற மாதத்தில் முன் வைக்கப்படவுள்ள வரவு – செலவு திட்டத்தின் கூட்டங்களின் போது மன்னார் வைத்தியசாலையில் தீர்க்கப்பட வேண்டிய மிக முக்கிய பிரச்சினைகளை ஆழமாக முன்வைத்து வைத்தியசாலையின் தேவையை நிச்சயமாக பெற்றுத் தருவேன் .– என்றார்.

# இரண்டாம் மொழி பூர்த்தி செய்தோருக்கு மட்டக்களப்பில் சான்றிதழ் வழங்கி வைப்பு!

(பழுவூரான்)




அரச உத்தியோகத்தர்களுக்கான தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் இரண்டாம் மொழி பயிற்சி நெறி நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்டு வருகின்றது.

இதன் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டத்தின் அரச உத்தியோகத்தர்களுக்கான சிங்கள பயிற்சி நெறி பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் தேசிய மொழிகள் பிரிவின் மேலதிக செயலாளர் அனுராத விஜேகோன் தலைமையில் வை.எம்.சி.ஏ மண்டபத்தில் இடம் பெற்றது.

உத்தியோகத்தர்களின் இரண்டாம் மொழியாற்றலை அதிகரிப்பதுடன் அலுவலக கடமையில் ஈடுபடும் போது தொடர்பாடலை மேம்படுத்துவதாக இந்தக் கற்கை நெறி அமைந்திருந்தது.

இந் நிகழ்வின் போது சிங்கள பாரம்பரிய கலை கலாசாரத்தை பிரதிபலிக்கும் வகையில் உத்தியோகத்தர்களால் நிகழ்வுகள் அரங்கேற்றப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மட்டக்களப்பு மாவட்ட உதவி அரச அதிபர் ஆ.நவேஸ்வரன், பொது நிர்வாகம் உள்நாட்டலுவல்கள் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் தேசிய மொழிகள் பிரிவின் திட்ட உத்தியோகத்தர் ஹேமந்த புஸ்பகுமார, மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் கே.மதிவண்ணன், மாவட்ட தகவல் அதிகாரி வி. ஜீவானந்தன், மாவட்ட செயலகத்தின் இரண்டாம் மொழி கற்கையின் இணைப்பாளர் வி.சந்திரகுமார் மற்றும் பாடநெறிக்கான வளவாளர்களான எம்.மாணிக்கவாசகம், செல்வி.எம். கே.திலினி மதுசிகா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# இலங்கைக் கிரிக்கெட் அணி தொடர் தோல்வி சபைச் செயலாளர் திடீர் பதவி விலகல்!



இலங்கைக் கிரிக்கெட் சபையின் செயலாளர் மொஹான் டி சில்வா தனது பதவியை இராஜினாமாச் செய்துள்ளார்.

தற்போது இந்தியாவில் நடைபெற்று வரும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இலங்கை அணி படுமோசமான தோல்விகளை அடைந்து வருகின்றது.

இதனால், இலங்கைக் கிரிக்கெட் சபை மற்றும் அதிகாரிகள் மீது பல தரப்பினரும் விமர்சனங்களை முன்வைத்து வருகின்றனர்.

இந்நிலையில், இலங்கைக் கிரிக்கெட் சபைச் செயலாளரான மொஹான் டி சில்வா தனது பதவியை இராஜிநாமா செய்து, அதற்கான உத்தியோபூர்வ கடிதத்தை சமர்ப்பித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே, விளையாட்டுத்துறை அமைச்சர் றொஷான் ரணசிங்க இலங்கைக் கிரிக்கெட் சபையை கடுமையாக சாடியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ‘லிட்ரோ’ விலைகள்...

1,431 ரூபா என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, 2.3 கிலோ கிராம் எடையுள்ள சமையல் எரிவாயு கொள்கலனின் விலை 18 ரூபாவால் அதிகரிக்கப்பட்டு புதிய விலை 668 ரூபா என அறிவிக்கப்பட்டுள்ளது

இதேவேளை, லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை தொடர்ந்தும் மூன்றாவது முறையாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த செப்டெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதங்களில் லிட்ரோ நிறுவனம் எரிவாயு விலையை அதிகரித்திருந்தது.

எனினும், கடந்த ஒகஸ்ட் மாதத்தில் விலையில் திருத்தம் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

ஒகஸ்ட் மாதத்துக்கு முன்னர், லிட்ரோ எரிவாயுவின் விலை ஐந்து தடவைகள் திருத்தப்பட்டிருந்த போதிலும், அதில் ஒரு தடவை மாத்திரமே எரிவாயுவின் விலையை அதிகரித்திருந்தது.

### இஸ்ரேலில் மேலுமொரு...

சுஜித் பண்டார யத்வாரவின் மரணத்தை இஸ்ரேல் பொலிஸாரும் உறுதிப்படுத்தியுள்ளனர் என்று இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்.

“இஸ்ரேலியப் பொலிஸாரால் கண்டு பிடிக்கப்பட்ட அடையாளம் தெரியாத சடலம் ஒன்றின் மரபணு மாதிரிகள் மற்றும் யத்வாரவின் பிள்ளைகளிடம் இருந்து பெறப்பட்ட மரபணு மாதிரிகளுடன் பொருந்தியிருக்கின்றமையை அடுத்து மரணம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

சுஜித் பண்டார யத்வார ஹமாஸ் தீவிரவாதிகளால் பணயக் கைதியாகப் பிடிக்கப்பட்டார் என முதலில் சந்தேகிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 7ஆம் திகதி இஸ்ரேல் மீதான ஹமாஸ் தாக்குதலின்போது அவர் இறந்துவிட்டார் என்பது தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்கும் இடையிலான மோதலில் உயிரிழந்த இரண்டாவது இலங்கைப் பிரஜை இவராவார்.” - என்றார்.

முன்னதாக, கடந்த ஒக்டோபர் மாதம் ஹமாஸ்போராளிகள்நடத்தியதாக்குதலில் இலங்கையைச் சேர்ந்த அனுலா ரத்நாயக்க இஸ்ரேலில் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. அவரது சடலம் கடந்த மாதம் 28ஆம் திகதி இலங்கைக்கு அனுப்பப்பட்டது.

### யாழ். நூலகம்...

என்ன என இந்திய நிதி அமைச்சர், யாழ். மாநகர சபை ஆணையாளரிடம் வினவியபோது ஆணையாளர் மழுப்பலாகச் சிரித்தபடி கடந்து சென்றமை தெரிய வந்துள்ளது.

இந்தியாவின் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்தபோது யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையம், பொது நூலகம் உட்பட பல்வேறு இடங்களைப் பார்வையிட்டிருந்தார்.

யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தினை பார்வையிட்ட போது யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் த.ஜெயசீலன் நூலகத்தின் பல்வேறு பகுதிகளையும் விபரித்துக்கொண்டிருந்தார்.

இதன்போது யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர், நூலகம் எரியூட்டப்பட்ட நினைவைக் குறிக்கும் பதாகையைக் காட்டி நூலகத்தில் ஏற்பட்ட தீயினால் ஓலைச்சுவடிகள் அடங்கிய முக்கிய புத்தகங்கள் அழிந்தன என்றும், பின்ன நூலகம் மீளப் புனரமைக்கப்பட்டது என்றும் தெரிவித்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நூலகத்தில் தீ எவ்வாறு ஏற்பட்டது என இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கேள்வி எழுப்பியபோது மழுப்பலாக சிரிப்புடன் பதிலளித்துவிட்டு அடுத்த பகுதிக்கு அழைத்துச் சென்றுவிட்டார் யாழ். மாநகர சபை ஆணையாளர்

நூலகம் எந்தத் தரப்பால், எந்த நோக்கத்துக்காக எரிக்கப்பட்டது என்ற உண்மையை வெளிப்படையாகக் கூறாது விட்டாலும் நாசுக்காகக் கூறியிருக்கலாம் என்று சமூக ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

### தமிழர்களுக்குத் தீர்வு...

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“தமிழ் மக்களுக்குத் தீர்வு வேண்டும் என்று சம்பந்தன் உள்ளிட்ட தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் விடுக்கும் கோரிக்கையை ஏற்கின்றோம். அதேபோல் அவர்களும் ஜனாதிபதியின் தேசிய ரீதியான செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அப்போதுதான் நாடாளுமன்றத்தில் ஆளும், எதிரணி என இரு தரப்பினரும் இணைந்து ஒரு தீர்வுத் திட்டத்தை முன்மொழிந்து அதை நிறைவேற்றிக்கொள்ள முடியும்.” - என்றார்.

### காஸா மீதான...

பலஸ்தீனக் குழந்தைகளைக் கொல்ல வேண்டாம், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மருந்துப் பொருட்களை உடன் அனுப்பு, அமெரிக்க ஆயுத வியாபாரிகளுக்குப் பலஸ்தீனக் குழந்தைகள்தான் பரிசோதனைக் களமா?” என எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியிருந்ததுடன், கோஷங்களையும் எழுப்பினர்.

“இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற இனவழிப்பு யுத்தம் போன்று பலஸ்தீனத்தில் அரபு மக்களுக்கு எதிராக இஸ்ரேல் இனவழிப்பு யுத்தத்தை மேற்கொண்டுள்ளது. இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். அமரிக்கா தனது ஆயுதப் பரிசோதனைக் களமாக இந்த யுத்தத்தைப் பயன்படுத்தக் கூடாது. இந்த யுத்தத்தை உடன் நிறுத்த உலக நாடுகளும், ஐ.நாவும் கவனம் செலுத்த வேண்டும்” - என்றும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் இதன்போது தெரிவித்தனர்.

இதில் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் பிரதிநிதிகள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், பல்வேறு சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், குழந்தைகள், சிறுவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.







# திருகோணமலை அரச அலுவலருக்கு இரண்டாம் மொழி பயிற்சி நெறிகள்

(ஹஸ்பர்)

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் தேசிய மொழிகள் பிரிவின் கீழ் உள்ள தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் அரச உத்தியோகத்தர்களுக்கு இரண்டாம் மொழி சிங்கள பயிற்சி நெறியின் இடம்பெற்று வருகிறது.

இதன் இறுதி நாள் நிகழ்வு நேற்று முன்தினம் (02) திருகோணமலை மாவட்ட செயலக புதிய ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது பிரதம விருந்தினராக மாவட்ட அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி கலந்து கொண்டார்.

150 மணித்தியாலங்களை கொண்ட இந்தப் பயிற்சி நெறியில் மாவட்ட செயலக அரச உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக அரச உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய திணைக்கள அரச உத்தியோகத்தர்கள் என 89 பேர் பூர்த்தி செய்தனர்.



இதன் போது பயிற்சியைப் பூர்த்தி செய்த அரச உத்தியோகத்தர்களால் கலை நிகழ்வுகளும் நடத்தப்பட்டன.

தேசிய இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடனும், சிங்கள மொழி ஆற்றலை விருத்தி செய்து கொள்வது மட்டுமின்றி தங்களது வேலைகளை இலகுபடுத்தும் நோக்குடனும் நாடாளாவிய ரீதியில் இந்தப் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

இந்நிகழ்வில் மேலதிக அரச அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், மேலதிக அரச அதிபர் (காணி) எஸ்.சுதாகரன், தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி, மாவட்ட மற்றும் பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், நிர்வாக உத்தியோகத்தர்கள், திணைக்கள அதிகாரிகள், தேசிய ஒருமைப்பாட்டு மேம்பாட்டு உதவியாளர், வளவாளர்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# மஸ்கெலியா முத்துமாரியம்மன் ஆலயத்தில் திருடிய சிலை மீட்பு!

(மஸ்கெலியா நிருபர்)

மஸ்கெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் உள்ள புரவுன்ஷீக் தோட்ட புளும்பீல்ட் பிரிவில் உள்ள அம்மன் கோயிலில் நேற்று முன்தினம் காலை திருட்டு இடம்பெற்றுள்ளது.

ஆலயத்தின் முன்புறம் உள்ள பாதுகாப்பு அரணில் உள்ள இடைவெளி பகுதி வழியாக ஆலயத்தின் உள்ளே சென்று அங்கு இருந்த பெறுமதி மிக்க அம்மன் வெங்கல சிலை ஒன்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் பூசகர் ஆலய நிர்வாகத்திடம் கூறியதை தொடர்ந்து பரிபாலன சபையினர் மற்றும் பூசகர் இணைந்து மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார மற்றும் பொலிஸார் அப்பகுதியைச் சுற்றி வளைத்துப் பார்வையிட்டனர்.

இதேவேளை நேற்று மாலை அதே அம்மன் சிலை புரவுன்ஷீக் தோட்ட புரவுன்ஷீக் பிரிவில் சாமிமலை மஸ்கெலியா பிரதான வீதி அருகில் உள்ள பஸ் தரிப்பிடத்தில் இருப்பதைக் கண்டு மக்கள் சம்பந்தப்பட்ட ஆலயத்தின் பரிபாலன சபைக்கு அறிவித்தனர்.

பரிபாலன சபையினர் மற்றும் பூசகர் இணைந்து மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு இது தொடர்பில் அறிவித்தனர்.

சம்பவ இடத்துக்குப் பொலிஸார் சென்று அங்கு இருந்த வென்கல சிலையை மீட்டு ஆலயத்தில் ஒப்படைத்தனர்.

அத்தோடு ஆலயத்தில் பாதுகாப்பு அதிகரிக்க வேண்டும் என்று கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

நேற்று இரவு மேலும் சில பொருள்கள், சுவாமி சிலை, உண்டியல், தீயணைப்புக் கருவிகள் போன்ற பொருட்கள் திருட்டுப் போயுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து பொலிஸ் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த நிலையில் விசாரணை மேற்கொண்ட பொலிஸார் 48 வயது மதிக்கத்தக்க அதே தோட்டத்தை சேர்ந்த ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

விசாரணைகளை அடுத்து அவரது வீட்டில் இருந்து காணாமர் போன பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நியாயமற்ற தேர்தல் முறைகள்

நாட்டின் தேர்தல்களை சுயாதீனமாகவும், நடுநிலையாகவும், நீதி நேர்மையாகவும் நடத்த வேண்டும் என்று தான் எல்லோரும் பேசுகின்றனர். ஒவ்வொரு அரசமைப்புத் திருத்தம் வருகின்ற சமயங்களில் எல்லாம் அது குறித்து விஸ்தாரமாக ஆராய்கின்றார்கள். சுயாதீன தேர்தல் ஆணைக்குழு பற்றி எல்லாம் வற்புறுத்துகிறார்கள்.

ஆனால் விடயம் என்னவோ இல்லாத ஊருக்கு வழி தேடும் விவகாரமாகவே தொடர்கின்றது.

நாட்டின் தேர்தல் ஆணையம் சுதந்திரமானது என்கிறார்கள். அரசமைப்பின்படி அதன் ஆணையாளர்களின் எண்ணிக்கை ஐந்து. அதன் கூட்ட (கோரம்) எண் மூன்று. ஆனால் இப்போது நான்கு உறுப்பினர்களே அதில் உள்ளனர். ஐந்தாவது உறுப்பினரை நியமிப்பது குறித்து நீண்ட காலமாக யாருமே கவலைப்படவே இல்லை - அரசமைப்பு கவுன்ஸில் உட்பட.

நாட்டின் தேர்தல்கள் எப்போது நடத்தப்பட வேண்டும் என்ற விவகாரம் சுயாதீனமானது, அதைத் தேர்தல் ஆணையமே உரிய காலத்தில் தீர்மானித்து முன்னெடுக்கக் கூடியதாக சட்ட ஏற்பாடுகள் உள்ளன என்று கூறப்படுகின்றது. ஆனால் அப்படி நடைமுறையில் இல்லை. அதிகாரத்தில் - ஆட்சியில் - இருப்பவர்களே தம்மிஷ்டப்படி - தமது அரசியல் வசதிகள், தெரிவுகள், தேவைகள், சுயநலன்களுக்கு ஏற்ப தேர்தல்கள் நடத்துவதைத் தீர்மானிக்கும் வகையிலேயே சட்டம் இங்கு ஓட்டைப் பொத்தலாக இருப்பது கண்கூடு.

சட்டப்படி நடத்தப்பட வேண்டிய தேர்தலை வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொண்ட பின்னர், நிதியை வெட்டுவதன் மூலம் ஆட்சியதிகாரத்தில் உள்ளோர் தடுக்க முடியும் என்றால் -

எந்தத் தேர்தலை முதலில் நடத்துவது, எந்த தேர்தலை தாமதித்து நடத்துவது என்பதை அப்படி அதிகாரத்தில் உள்ளோரே தம் விருப்பப்படி தீர்மானிக்க வசதி இருக்கும் என்றால் -

தேர்தல் நடத்துவது தொடர்பான சுயாதீனத்தன்மை அப்படியே அடிபட்டு போகின்றது. இதையொட்டி இரண்டு கேள்விகள் எழுகின்றன.

முதலாவது - அறிவிக்கப்பட்டு அரைவாசித் தூரம் வரை முன்னேறிவிவிட்ட உள்ளூராட்சித் தேர்தலை நிதியை வெட்டுவதன் மூலம் படு 'சிம்பிளாக' ஜனாதிபதியால் தடுக்க முடியும் என்றால், அதிகாரத்தில் இருக்கும் அவர் தனது பதவிக் காலத்தை முடிவுக்கு கொண்டு வரக்கூடிய ஜனாதிபதி தேர்தலையும் கூட அதே முறையில் தடுத்துத் தான் பதவியில் நீடிக்க முடியும் அல்லவா?

அடுத்தது - ஜனாதிபதி தேர்தலுக்கு நிதி கிட்டுமானால் அதற்கு முன்னர் நடத்தப்பட வேண்டிய - நடத்தப்படாமல் நிலுவை நிற்கின்ற - உள்ளூராட்சித் தேர்தலுக்கு நிதி இல்லை என்று எப்படிக் கை விரிக்க முடியும்? அப்படி நிதி கிட்டும் போது முதலில் நிலுவையில் உள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னெடுத்து, அதன் பின்னரே ஜனாதிபதி தேர்தலை நடத்த வேண்டும். அதிகாரத்தில் இருப்போர் தமக்கு வசதியானதை - வாய்ப்பானதை - முடிவெடுக்க அனுமதிக்கப்பட்டால், அந்தத் தேர்தல் எப்படி சுயாதீனமானதாக, நீதி - நேர்மையானதாக இருக்க முடியும்?

உள்ளூராட்சி, மாகாண சபைகள், நாடாளுமன்ற, ஜனாதிபதி தேர்தல் எல்லாம் இந்த விடயத்தில் சுயாதீனமாக நடத்தப்பட முடியாதவை. அதற்கான உரிய சட்டங்கள் நம் நாட்டில் இல்லை என்பதே உண்மை.



## ஹட்டன் கல்வி வலயத்தில் வாசிப்பு போட்டியில் முதலிடம்

அகில இலங்கை தமிழ்த் தினப் போட்டியில் பிரிவு 2 இல் ஹட்டன் கல்வி வலயத்துக்கு உட்பட்ட பொகவந்தலாவ கெர்க்கஸ்வோல்ட் இலக்கம் 02 தமிழ் வித்தியாலய மாணவி சிவநேசன் கிரிஷாந்தினி முதலாம் இடத்தை பெற்றுள்ளார்.

வாசிப்பு போட்டியில் பங்குபற்றியே இவர் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

இந்த மாணவிக்கு சான்றிதழ் வழங்கி வைக்கும் நிகழ்வில் பயிற்றுவித்த ஆசிரியர்கள் மற்றும் பெருந்தோட்ட பாடசாலைகளுக்கான பணிபாளர் சு. முரளிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மட்டக்களப்பு களுதாவளையில் காட்டு யானைகள் அட்டகாசம்!



(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப் பகுதியிலிருந்து மட்டக்களப்பு வாவியின் ஊடாக எழுவான்கரைப் பகுதிக்கு இரண்டு காட்டு யானைகள் நேற்று வெள்ளிக்கிழமை (03) அதிகாலை உட்புகுந்தன. இதனால் அப்பகுதி மக்கள் பெரும் அச்சத்தில் இருந்தனர்.

அதிகாலை 3 மணியளவில் இந்தக் காட்டு யானைகள் மட்டக்களப்பு வாவியைக் கடந்து களுதாவளைக் கிராமத்துக்குள் சென்றுள்ளன.

இவ்வாறு கிராமத்துக்குள் சென்ற இரு காட்டு யானைகள், தோட்டங்களையும் வீட்டு வேலிகளையும் துவம்சம் செய்துவிட்டு மாங்காடு கிராமத்தில் அமைந்துள்ள தோட்டங்களுக்குள் சென்று அங்கும் நாசம் செய்தன.

இந்தத் தகவலை அறிந்த வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகள் அங்கு சென்று யானைகளை விரட்டியுள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2023

"ஒரு மனிதன் தனக்காக இல்லாவிட்டாலும் தனது எதிர்கால சந்ததியினருக்காக மரங்களை நாட்டவேண்டும்."

-அலெக்சான்டர் சிமித்
(ஸ்கொட்லாந்துக் கவிஞர்)



# மன்னார் முசலி பயனாளிகளுக்கு விதை நிலக்கடலைகள் வழங்கல்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தி மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சால் மன்னார் முசலி பிரதேசச் செயலகப் பிரிவுக்கு உட்பட்ட சுமார் 80 பயனாளிகளுக்கான விதைப்புக்கான நிலக்கடலைகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் கௌரவ காதர் மஸ்தான் பிரதம அதிதியாக கலந்து கொண்டு பயனகளிகளுக்கு விதை நிலக்கடலை வழங்கினார்.





# தீகவாபி வைத்தியசாலையில் இரண்டு மாடிகள் கையளிப்பு

(நூருல் ஹுதா உமர், அஸ்ஹர் இப்றாஹிம்)

உலக வங்கியின் நிதியுதவியில் தீகவாபிய பிரதேச வைத்தியசாலையில் சகல வசதிகளையும் கொண்ட இரண்டு மாடிக் கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

வெளிநோயாளர் மற்றும் கிளினிக் பிரிவுகளைக் கொண்டு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தைப் பாவனைக்காகக் கையளிக்கும் நிகழ்வு நேற்று (03) தீகவாபிய பிரதேச வைத்தியசாலையின் பிரதேச வைத்திய அதிகாரி தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு கட்டடத்தைக் கையளித்தார்.

இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சகாதார சேவைகள் பணிமனை திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம்.மாஹிர், வைத்தியர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலர் கலந்துகொண்டனர்.



# சிகிரிய மற்றும் தம்புள்ளவுக்கு சென்ற ஊடகவியலாளர்கள்

(அஸ்ஹர் ஆதம்)

பல்வேறு ஊடக நிறுவனங்களையும் உள்ளடக்கிய ஊடகவியலாளர்கள் குழுவொன்று சிகிரிய மற்றும் தம்புள்ள பிரதேசங்களுக்கு விஜயம் செய்துள்ளது.

வரையறுக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் கூட்டுறவுச்சங்கம் மத்திய கலாசார நிதியத்துடன் இணைந்து ஏற்பாடு செய்த இரு நாள் கள விஜயத்தின் போது தம்புள்ளையில் உள்ள சுவரோவியங்களின் ஆராய்ச் சிகள் மற்றும் பேணிப்பாதுகாத்தலுக் குமான கலாநிதி ரோலண்ட் சில்வா நிலையத்துக்குச்சென்று அங்கு இடம் பெற்று வரும் செயற்பாடுகளைப் பார்வையிட்டது.

அங்குள்ள நூலகத்துக்கும் சென்று அங்குள்ள தொல்பொருள் சம்பந்தமான பல்வேறுபட்ட நூல்களையும் பார்வையிட்டனர்.

அத்துடன் தம்புள்ளயிலுள்ள தொல்பொருள் நூதன சாலைக்குச் சென்ற இக்குழுவினர் அங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ள சுவரோவியங்கள் மற்றும் பண்டய வரலாறுகளுடன் தொடர்பு பட்ட புகைப்படங்கள் மற்றும் ஆவணங்களையும் பார்வையிட்டனர்.



இரண்டாம் நாள் நிகழ்வாக சிகிரிய மலைக் குன்றுக்கும் இக்குழு சென்றது.

கலாசார மற்றும் மத விவகாரங்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயகவையும் இவர்கள் சந்தித்தனர்.

# ‘நவீன சீதை’ நூல் அறிமுக விழா

(எம்.ஏ.றமீஸ்)

கவிச்சுடர் சிவரமணி எழுதிய ‘நவீன சீதை’ நூல் அறிமுக விழா நாளை (05) வவுனியா நகர மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பிருந்தாவனம் மாத இதழ் ஆசிரியர் பிரியநிலா தலைமையில் முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ள இந்த நிகழ்வின் போது பிரதம அதிதியாக முனைவர் பட்டிமன்ற நடுவர் நெல்லை பி. சுப்பையா கலந்துகொள்வார்.

இதன்போது சிறப்பு அதிதிகளாக வவுனியா இந்துக்கல்லூரி அதிபர் புனிதவதி உதயசேகரன், ஆசிரியர் கலைவாணி நாகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

இந்நிகழ்வின்போது நூலின் முதற் பிரதியினை கிருபா வாகன பயிற்சி கலாசாலை முதல்வர் அ.கிருபாகரன் பெற்றுக் கொள்வார். நூல் மீதான நயப்புரையை கருணாகரன் நிகழ்த்துவார்.

# வாசிப்பு மாதத்தில் நடமாடும் நூலகம்!

(நூருல் ஹுதா உமர்)

அரச சுற்று நிரூபத்துக்கு அமைய நூலக வாரத்தை முன்னிட்டு “நினைத்த இடத்துக்குச் செல்லவும் வாசிப்பதற்கு ஒரு புத்தகத்தை எடுக்கவும்” எனும் தொனிப் பொருளில் நடமாடும் நூலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் நூலக பொறுப்பாளர் ஏ.எல். நளீம் தலைமையில் நடை பெற்ற நிகழ்வில் கல்லூரியின் அதிபர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு நூலகத்தைத் திறந்து வைத்தார்.

நடமாடும் நூலகத்தில் சமயம், அகராதிகள், நாவல், கல்வி, அறிஞர்கள், பாடப் புத்தகத்துடன் தொடர்பான நூல்கள், செய்திப் பத்திரிகைகள், கவிதைகள், சஞ்சிகைகள் எனப் பல் துறைசார்ந்த நூல்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இடைவேளை நேரத்தில் கல்லூரி சமூகத்தினர் பயன்பெறும் வகையிலும் வாசிப்பை மாணவர்கள் ஏற்படுத்தும் நோக்குடனும் இது ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. கல்லூரியின் நூலக பொறுப்பாளர் ஏ.எல். நளீம் இதற்கான உதவிகளை மேற்கொண்டுள்ளார்.



இந்த நிகழ்வில் மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) உதவி அதிபர்களான ஏ.எச் நதிரா, எம்.எஸ் மனூனா, என்.டி நதீகா, ஆசிரியர்கள், நூலக உத்தியோகத்தர்கள், நூலக சங்கத்தின் மாணவிகள் என பலரும் கலந்து கொண்டனர்.



# திருமலை மாற்றுத் திறனாளிகளின் பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு

(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட செயலகம் மற்றும் அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின் ஏற்பாட்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள மாற்றுதிறனாளி குடும்பங்களில் உள்ள பெற்றோர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வானது நேற்று (03) மாவட்ட அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் மாவட்ட செயலக ஒன்று கூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மாற்றுத்திறனாளிகளை எவ்வாறு சுகாதாரம் மற்றும் நோய்களில் இருந்து பாதுகாப்பது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. மாற்றுதிறனாளி பிள்ளைகளுடன் பெற்றோர்களுக்கு ஏற்படும் சவால்களுக்கு உளவள ஆலோசனை வழங்கப்பட்டது.

எதிர்காலத்தில் சரியான முறையில் சுய தொழில் ஒன்றை எவ்வாறு தெரிவு செய்வது மற்றும் சரியான முதலீட்டு வழிமுறைகள் தொடர்பாகவும் வள வாளர்களால் மிகவும் தெளிவாக விளக்கமளிக்கப்பட்டது.



இந்நிகழ்வில் அங்கவீனமுற்ற தேசிய செயலகத்தில் இருந்து சமூக சேவை உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கப்பல் துறை, ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்தியர்கள், சமூக சேவைகள் மாவட்ட இணைப்பாளர் மற்றும் மாவட்ட உளவள துணை உத்தியோகத்தர் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பில் 22 பேருக்கு சமாதான நீதிவான் நியமனம்

(ந.குகதர்சன் )

மட்டக்களப்பு மாவட்டத்தில் 22 பேருக்கு முதற்கட்டமாக சமாதான நீதிவான் பதவி நியமனம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான நியமனக் கடிதங்களை நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் (ஜனா) வழங்கியுள்ளார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் கருத்துத் தெரிவிக்கையில் –

பலரின் எதிர்பார்ப்புக்கு மத்தியில் தற்போது உங்களுக்கு இந்த நியமனம் கிடைக்கப்பெற்றுள்ளது. மக்களைக் கருத்தில் கொண்டு சேவையாற்ற வேண்டும். இதனை வருமானம் ஈட்டும் செயற்பாடாகக் கருதாமல் மக்களின் குறைகளை நிவர்த்திக்கக் கூடியவாறு செயற்பட வேண்டும். இதன் கௌரவத்தைப் பாதிக்காத வண்ணம் உங்கள் நடவடிக்கைகள் இருக்க வேண்டும் என்று தெரிவித்தார்.





# படையினரால் நிர்மாணிக்கப்பட்ட வீடு பயனாளியிடம் கையளிப்பு!

(ஹஸ்பர்)

திருகோணமலை தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட புதுக்குடியிருப்பு கிராம சேவகர் பிரிவில் முள்ளிப் பொத்தானை திஸ்ஸபுர படையினரின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட புதிய வீடு பயனாளியிடம் ஒப்படைக்கப்பட்டது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் நேற்று (04) நிகழ்வு இடம் பெற்றது.

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் தெரிவு செய்யப்பட்ட மாற்றுத் திறனாளி குடும்ப அங்கத்தவர் ஒருவரை உள்ளடக்கிய பயனாளி ஒருவருக்கே இந்தப் புதிய வீடு கையளிக்கப்பட்டது.

இதற்கான நிதி உதவியை அரச சார்பற்ற நிறுவனங்களான ரெக்டோ, லண்டன் ஐ.எவ்.ஓ.எச். வழங்கியிருந்தன. நிர்மாணப்பனிகளை திஸ்ஸபுர படையினர் முன்னெடுத்தனர்.



நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாராய்ச்சி, தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி, கிழக்கு மாகாண இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் எம். கே.யு.பி.குணரத்ன, திஸ்ஸபுர இராணுவ முகாம் லெப்டினன் கொலனல் நலின் மாரசிங்க, 22 ஆம் படைப் பிரிவு இராணு முகாம் மேஜர் ஜெனரல் மிகிது பெரேரா, 223 ஆம் பிரிவு பிரிகேடியர் வை.எச். பிரன்கஜீவ உட்பட பலர்கலந்து கொண்டனர்.

# சேவை நலன் பாராட்டு!

(நூருல் ஹுதா உமர் )

கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தில் இருந்து ஓய்வு பெற்றுச் செல்லும் தமிழ் பாட ஆசிரிய ஆலோசகர் க. குணசேகரத்தின் சேவை நலன் பாராட்டு விழா நேற்று வலய கல்வி பணிமனை கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

வலயக்கல்வி பணிமனையின் நிர்வாகத்துக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம். ஜாபிர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.றியாஸா, கணக்காளர் வை.ஹபீபுல்லாஹ், கல்முனை கோட்டக் கல்வி பணிப்பாளரும், உதவிக் கல்விப் பணிப்பாளருமான யூ.எல். றியால், தமிழ்ப் பாடத்துக்கான ஆசிரிய வளவாளர் ஜெஸ்மி எம்.மூஸா ஆகியோர் ஓய்வு பெற்றுச் செல்லும் அதிகாரி தொடர்பில் நிகழ்வில் வாழ்த்துரையாற்றினர்.



இந்நிகழ்வில் வலயக்கல்வி அலுவலக பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரிய வளவாளர்கள் எனப் பலரும் பங்கேற்றனர்.

இதன்போது வலய நூலகத்துக்கு ஒரு தொகுதி நூல்கள் ஓய்வு பெற்றுச் செல்லும் தமிழ் பாட ஆசிரிய ஆலோசகர் க.குணசேகரத்தால் தமிழ் மொழிப் பிரிவிடம் வழங்கிவைக்கப்பட்டது.



# மாவீரர் தினத்தை முன்னிட்டு

## ஆட்காட்டிவெளி துயிலும் இல்லத்தில் சிரமதானம்

**(மன்னார் நிருபர்)**

தமிழ் மக்களின் உரிமைப் போரின் போது தமது உயிர்களை தியாகம் செய்த மாவீரர்களை போற்றி வணங்கும் மாவீரர் நாள் நவம்பர் எதிர்வரும் 27ஆம் திகதி தமிழ் மக்களால் நினைவு கூறப்படவுள்ளது.

இதற்கமைய மன்னார் மாவட்டத்தில் ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் இவ்வாண்டுக்கான மாவீரர் நாள் நிகழ்வுகள் செய்வதற்கான சிரமதான பணிகள் மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் மாவீரர் துயிலும் இல்ல பணி குழுவினரால் இன்று (4) ஆரம்பிக்கப்பட்டது.

மாவீரர் நெடுங்கீரனின் தந்தை வீரசிங்கம் தலைமையில் சிரமதான பணி இடம்பெற்று வருகின்றது.

சிரமதானத்தின் பின்னர் முதல் பெண் போராளி இரண்டாம் லெப் மாலதியின் சகோதரன் தொம்மையால் பொது சுடர் ஏற்றப்பட்டு மாவீரர் தந்தை ராசாவால் மலர் வணக்கம் ஆரம்பிக் கப்பட்டது.

ஆரம்ப நாள் நிகழ்வு மற்றும் சிரமதான பணியில் முன்னாள் போரா ளிகள், மாவீரர்களின் பெற்றோர் கள்,துயிலும் இல்ல பணி குழு உறுப் பினர்கள் கலந்து கொண்டனர்.







# கிழக்கு மாகாண இலக்கிய விழா' விருதுகள் பெறவுள்ளோர் விவரம்!

**(வி.ரி. சகாதேவராஜா)**

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் வருடா வருடம் நடத்தப்பட்டுவரும் கிழக்கு மாகாண இலக்கிய விழா - 2023 இல் விருதுகள் பெற்றுக் கொள்ளவுள்ளோரது விவரங்களைக் கிழக்கு மாகாண கலாச்சார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் சரவணமுத்து நவநீதன் வெளியிட்டார்.

வித்தகர் விருது பெறுபவர்கள் – கனகசூரியம் யோகானந்தன் (இலக்கியம்), மூத்ததம்பி மகாதேவன் (இலக்கியம்), ஜனாப். மீராமுகைதீன் கமால்தீன் (இலக்கியம்), சாமித்தம்பி திருவேணி சங்கமம் (இலக்கியம்), திருமதி. ஜெகதீஸ்வரி நாதன் (இலக்கியம்), திருமதி. ஆறுமுகம் பரமேஸ்வரி (ஆற்றுகை), திருமதி. நிர்மலா தம்பிராஜா (ஆற்றுகை), இராசையா கிருஸ்ணபிள்ளை (ஆற்றுகை), ஜனாப். முகம்மது இப்ராஹிம் ஜாபீர் (பல்துறை), தம்பிராஜா சகாதேவராஜா (பல்துறை), மூத்ததம்பி யோகானந்தராசா (நாட்டாரியல்), ஜனாப். முகம்மட் பசீர் அப்துல் கையூம் (ஊடகம்).

இளங்கலைஞர் விருது பெறுபவர்கள் முருகையா சதீஸ் (இலக்கியம்), ஜனாபா ஜலீலா முஸம்மில் (இலக்கியம்), ரவீந்திரா ராகுலன் (இலக்கியம்), சுப்பிரமணியம் கார்த்திகேசு (இலக்கியம்), திருமதி. ஜெனிதா பிரதீபன் (இலக்கியம்), பகவத்சிங்கம் நித்தியானந்தம் (ஆற்றுகை), சுந்தரலிங்கம் சந்திரகுமார் (ஆற்றுகை), சஞ்ஜீவ்ராஜ் (ஆற்றுகை), ஆறுமுகம் தனுஸ்கரன் (பல்துறை), ஜனாப் அப்துல் மஜீத் அஹமட்சாஜீத் (பல்துறை), குணரத்தினம் சிந்தாத்துரை (நாட்டாரியல்), வடிவேல் சக்திவேல் (ஊடகம்), நடராசா டிசாந்தினி (நுண்கலை).

பாடல் போட்டியில் வெற்றி பெற்றவர்கள் – அரச பதவி நிலை உத்தியோகத்தர்கள்– ஜனாப் எம்.ஏ.சி. அஹமட் ஷாபிர் (முதலாம் இடம்)– பிரதேச செயலாளர், அட்டாளைச்சேனை, ந. நேசகஜேந்திரன் (2 ஆம் இடம்) பிரதிக் கல்விப் பணிப்பாளர், பட்டிருப்பு, ச. அன்ரனிதாஸ் (3 ஆம் இடம்) கணக்காளர், குச்சவெளி பிரதேச செயலகம்.

அரச உத்தியோகத்தர்கள் – தி. டினேஸ்குமார் (முதலாம் இடம்) –அபிவிருத்தி உத்தியோகத்தர், சக்தி வித்தியாலயம், மண்டூர், பு. ஜெயகரன் (2 ஆம் இடம்) –முகாமைத்துவ உதவியாளர், மூதூர் பிரதேச சபை, கவிதா தேவவிதுரன் (3 ஆம் இடம்) அபிவிருத்தி உத்தியோகத்தர், சுமநல திணைக்களம், திருகோணமலை.

கலை இலக்கிய அறிவுப்போட்டியில் வெற்றி பெற்ற கலை மன்றங்கள் – ஹல்லாஜ் இஸ்லாமிய கலை இலக்கிய மன்றம் (முதலாம் இடம்) அக்கரைப்பற்று, கண்ணகி கலைக்கழகம் (2 ஆம் இடம்) கன்னங்குடா , தேனுகா கலைக்கழகம் (3 ஆம் இடம்) தேற்றாத்தீவு.

அதிகூடிய புள்ளிகள் பெற்றவர் – ஜனாப் அப்துல் ரசாக் – ஹல்லாஜ் இஸ்லாமிய கலை இலக்கிய மன்றம், அக்கரைப்பற்று.

அரச உத்தியோகதர்களுக்கான படைப்பாக்கப் போட்டி – புதுக்கவிதை – மனோகரன் சசிப்பிரியன் (முதலாம் இடம்) அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை, கல்முனை, ஜனாபா. முஹமது சியா பாத்திமா றொசானா (2ஆம் இடம்) பிரதேச சபை, சேருநுவர, திருமதி. பரராஜசிங்கம் ரோமினி (3 ஆம் இடம்) பிரதேச செயலகம், கல்முனை.

மரபுக் கவிதை – ஜனாபா. சித்தி சபீனா வைத்துல்லா (முதலாம் இடம்) அல்ஹிரா வித்தியாலயம், கிண்ணியா திருமதி தமிழ்ச்செல்வி வசந்தகுமார் (2 ஆம் இடம்) மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, திருகோணமலை, லோ. சேந்தன் (3 ஆம் இடம்) பிரதேச செயலகம், கல்முனை வடக்கு.

சிறுகதை – திருமதி. கரண்யா பிரசாந்தன் (முதலாம் இடம்) புனித வளனார் வித்தியாலயம், தன்னாமுனை, ஜனாபா முஹமது மர்சூக் பாத்திமா சுஜமயா (2 ஆம் இடம்) பிரதேச செயலகம், கல்முனை, ஜனாபா முஹமது சியா பாத்திமா றொசானா (3 ஆம் இடம்) பிரதேச சபை, சேருநுவர.

ஓவியம் – பு. சிறிகாந்த் (முதலாம் இடம்) விக்னேஸ்வரா வித்தியாலயம், மண்டூர், பிரதேச செயலகம், வெல்லாவெளி, இரத்தினசிங்கம் சிவகாந்தன் (2 ஆம் இடம்) புகையிரத திணைக்களம், மட்டக்களப்பு

புகைப்படம் – ஜனாப். முஹம்மது அபூபக்கர் றமீஸ் (முதலாம் இடம்) மத்திய கல்லூரி, அக்கரைப்பற்று, றொ. கன்யூட் றொட்றிகோ (2 ஆம் இடம்) பிரதேச செயலகம், குச்சவெளி.

எழுத்தாளர் நூல் வகை நூலின் பெயர் – தங்கராசா ஜீவராஜ் – ஆய்வு சார் படைப்பு – தம்பலகாமம் ஊர் பெயர் ஆய்வு, செல்லத்துரை லோகராஜா – புலமைத்துவம் – இதயதாகமே இலக்கியம், சிவபாதசுந்தரம் சுதாகரன் – சுயபுதுக் கவிதை – கிடுகு வீடு, சோ. இராசேந்திரம் – தாமரைத் தீவான் – மரபுக்கவிதை (புதிய) பத்துப்பாட்டு, முருகையா சதீஸ் – சுயநாவல் – கண்ணீரில் கரைந்த தேசம், திருமதி கௌரி லக்சுமிகாந்தன் – வரலாறு நோக்கில் கிழக்கிலங்கை, திருமதி. அ. யோகராஜா (மண்டூர் அசோகா) – சுயசிறுகதை – எழுதப்படாத கவிதைகள், சுந்தரலிங்கம் சந்திரகுமார் – நாடகமும் ஆய்வும்– யதார்த்த நாடகவியல் – இலக்கியமும் பகுப்பாய்வும், சுந்தரப்பிள்ளை சிவரெத்தினம் – நாட்டுக்கூத்தும் பிரதியாக்கமும் – மகிடிக் கூத்து, ஜனாப் செய்னுல் ஆப்தீன் – அப்துல் கப்பார் – இலக்கிய சஞ்சிகை – வெண்ணிலா (கவிதைமஞ்சரி), மூ. அருளம்பலம் – சமூகவிஞ்ஞானம் (ஆன்மீகம்) – பத்தாலய பாவாரங்கள் (பக்தியிலக்கியம்), வைத்தியர் ஆர். எப் றிஸ்மியா சமூக விஞ்ஞானம் (ஆயுள்வேத மருத்துவம்) அறிவும் ஆரோக்கியமும், ஆ. யோகராஜா – அறிவியலும் தொழிநுட்பமும் – இலங்கை அரசும் அரசியலும்.

# ஓவிய கூடத்தின் பரிசளிப்பு

**(த.சுபேசன்)**

சாவகச்சேரி ரி.பி. ஹன்ற் ஞாபகார்த்த ஓவிய கூடத்தின் பரிசளிப்பு வைபவம் நாளை (05) ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு ஓவிய கூட வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

ரி.பி. ஹன்ற் ஞாபகார்த்த ஓவிய கூடத்தின் ஸ்தாபகர் திருமதி யோகமணி அழகரத்தினம் தலைமையில் இடம்பெறவுள்ள பரிசளிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்குமார் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின் ரஸ்ஸூம், கௌரவ விருந்தினர்களாக சிவபூமி நிலையத் தலைவர் ஆறு திருமுருகன், அமெரிக்கன் சிலோன் தேவாலய தலைவர் தேவகுணானந்தன் அடிகளார், யாழ். மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் செனரத், யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளர் மனோகர், விரிவுரையாளர் பிரசாந், வடமராட்சி வலயக் கல்வி அலுவலக அழகியல் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆரியதாஸ் ஆகியோரும் கலந்து கொள்வர்.




# கணினி புலமைப் பரிசில் திட்டம் கிழக்கில் ஆரம்பித்து வைப்பு!

(அஸ்ஹர் ஆதம்)

கிழக்கு மாகாணத்தில் முதன்முறையாக 750 கணினி குறியீட்டு முறை கற்கை நெறிக்கான புலமைப்பரிசில் திட்டமொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

டாக்டர் ஜெமீல் வைத்தியசாலை டி.பி. கல்வி நிறுவகத்துடன் இணைந்து இத்திட்டத்தை ஆரம்பித்து வைத்துள்ளது.

கல்முனை டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையின் தவிசாளரும் விசேட வைத்திய நிபுணருமான டாக்டர் நிசான் ஜெமீலின் முயற்சியின் பயனாக இத்திட்டம் கல்முனையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் முன்னோடியும் இலங்கையின் முதல் தர தொழில் அதிபரும் பிரபல சமூக சேவையாளருமான தம்மிக்க பிரேராவிடம் டாக்டர் நிசான் ஜெமீல் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக இந்தப் பிராந்தியத்தில் முதல் தடவையாக இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இவ்வேலை திட்டத்தின் மூலம் இப்பிராந்தியத்திலுள்ள பாடசாலை மாணவர்கள், பாடசாலைக் கல்வியை முடித்தவர்கள் நன்மையடையவுள்ளனர்.

கல்முனை டாக்டர் ஜெமீல் ஞாபகார்த்த வைத்தியசாலை, கல்முனை அல் ஹாமியா அரபுக்கல்லூரியுடன் இணைந்து இத்திட்டத்தை முன்னெடுத்துள்ளது.



# மூன்று வருடங்களின் பின்னர் தோண்டி எடுக்கப்பட்ட 'பரண'!

சட்டவிரோத மின் இணைப்பில் சிக்கி உயிரிழந்த காலாவெவ பகுதியைச் சேர்ந்த 'பரண' என்ற யானையின் உடல் மூன்று வருடங்களின் பின்பு நேற்று வெள்ளிக்கிழமை (03) பிற்பகல் தோண்டி எடுக்கப்பட்டது.

கல்கிரியாகம வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரி எச்.எம்.எஸ். பண்டாரவின் மேற்பார்வையில் தோண்டும் பணி இடம்பெற்றது.

இவ்வாறு தோண்டி எடுக்கப்பட்ட தந்தங்களை கொண்ட பரண யானையின் தலைப் பகுதியை சுற்றுலா பயணிகளைக் கவரும் வகையில் காட்சிப்படுத்த வன விலங்கு பாதுகாப்பு திணைக்களம் தீர்மானித்துள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 26 ஆம் திகதி கலாவெவவுக்கு அருகிலுள்ள கல்கிரியாகம ரணவ வனப்பகுதியில் சட்டவிரோத மின் இணைப்பில் சிக்கி யானை உயிரிழந்தது.







யானையின் உடலை புதைப்பதற்கு முன்பு, பொதுமக்களுக்கு காட்சிப் படுத்த வும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகவும் தந்தங்களை கொண்ட பரண யானையின் தலைப் பகுதியை கல்கிரியாகம வன விலங்கு பகுதியில் தனியாக புதைக்க திணைக்களம் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2023
"ஒரு தேசமாக நிலைத்திருக்க, ஒரு மாநிலமாக வளர, மக்களாக வாழ எங்களிடம் மரங்கள் இருக்க வேண்டும்."
தியோடர் ரூஸ்வெல்ற் - அமெரிக்காவின் 26ஆவது ஜனாதிபதி
ஆளுக்கொரு மரம் நடுவோம்
நாளுக்கொரு வரம் பெறுவோம்
கார்த்திகையில் மரநடுகை தேசத்தை மாத்திரமல்ல;
தமிழ்த் தேசியத்தின் ஆன்மாவையும் குளிரச்செய்யும்!
தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்


AIRPORT PIKUP & DROPING
COLOMBO - JAFFNA
WEDDING SERVICE
DAY RENTING
KDH
BEST FOR
VANRENT
Make Your Ride Better
CALL NOW
+94 773 776 882



# முள்ளியவளை துயிலும் இல்லத்தில் அஞ்சலியுடன் ஆரம்பமானது சிரமதானம்!

## இராணுவத்திடம் இருந்து காணியை விடுவிக்குமாறும் கோரிக்கை

தமிழ் மக்களுக்கான உரிமைப் போரில் தமது உயிர்களை ஈகம் செய்த மாவீரர்களை போற்றி வணங்கும் மாவீரர் நாள் இவ்வாண்டும் கார்த்திகை 27 ஆம் திகதி தமிழ் மக்களால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களும் தயாராகி வருகின்றன.

இதற்கமைய முல்லைத்தீவு மாவட்டத்தில் இலங்கை இராணுவத்தின் 592 ஆவது படைப் பிரிவால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் இவ்வாண்டுக்கான மாவீரர் நாள் நிகழ்வுகள் செய்வதற்கான சிரமதான பணிகள் முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்ல பணிக்குழுவால் இன்று (04) ஆரம்பிக்கப்பட்டது.

முன்னதாக மாவீரர் களுக்கு ஈகைச் சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தி மலர்வணக்கம் இடம்பெற்றதை தொடர்ந்து சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

அத்தோடு மாவீரர் நாளை நினைவு கூறுவதற்கான உரிய இடவசதி இல்லாது தாம் துன்பப்படுவதாகவும் உடனடியாக இந்தக் காணியை விடுவித்து உதவுமாறும் உறவுகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.













# மாலைதீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களை மீட்க நடவடிக்கை வேண்டும்!

## - ஆட்சியரிடம் தருவைக்குளம் மீனவர்கள் மனு



மாலைதீவில் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களது படகையும் மீட்க வலியுறுத்தி தருவைக்குளம் மீன வர்கள் நேற்று மாவட்ட ஆட்சியர், எஸ்.பி யிடம் கோரிக்கை மனு வழங்கியுள்ளனர்.

தூத்துக்குடி அருகே உள்ள தருவை குளத்தைச் சேர்ந்த பாக்கியராஜ் என்ப வருக்கு சொந்தமான விசைப்படகில் 12 மீனவர்கள் கடந்த மாதம் 1 ஆம் திகதி ஆழ்கடலில் தங்கி மீன்பிடிக்கச் சென்றனர். ஒக்டோபர் 20 ஆம் திகதி முல்லைத்தீவு எல்லை அருகே அவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது அங்கு ரோந்து வந்த மாலைதீவு கடலோர காவல் படையி னர், மாலைதீவு கடல் பகுதிக்குள் நுழைந்து மீன்பிடித்த குற்றச்சாட்டில் 12 மீனவர்களையும் கைது செய்தனர். விசைப்படகையும் பறிமுதல் செய்தனர். பின்னர் அவர்கள் மாலைதீவு பொலி ஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்த நிலையில், மீனவர்கள் மாலைதீவு கடல் பகுதிக்குள் அனுமதி யின்றி நுழைந்தனர் என்றும் தடை செய்யப்பட்ட சுறா மீன்களை பிடித்தனர் எனவும் கூறி மாலைதீவு அரசு 2.27 கோடி ரூபா அபராதம் விதித்துள்ளது.

இதனால். சிறை வைக்கப்பட்டுள்ள மீனவர்கள் மற்றும் அவர்களது குடும்பத் தினர் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இந்த நிலையில் தருவைக்குளம் மீனவர்கள், பங்குத்தந்தை எஸ். அந்தோணி மைக்கேல் வின்சென்ட் தலை மையில் நேற்று மாவட்ட ஆட்சியர் கோ. லட்சுமிபதி, எஸ்.பி. பாலாஜி சரவணன் ஆகியோரை சந்தித்து மனு அளித்தனர்.

அதில் தருவைகுளத்தை சேர்ந்த பாக்கியராஜ் என்பவருக்கு சொந்தமான செவுள்வலை விசைப்படகு கடந்த ஒக்டோபர் 20 ஆம் திகதி 12 மீனவர் களுடன் மாலைதீவு அரசால் சிறைபிடிக் கப்பட்டது. இதனால் கடந்த 2 வார காலமாக மீனவர்கள் மிகவும் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர்.

தற்போது மீனவரகளுக்கு 2.27 கோடி ரூபா அபராதத் தொகையை மாலை தீவு அரசு விதித்துள்ளது. கடலையே நம்பி உழைக்கும் மீனவர்களுக்கு மிகப்பெரிய தண்டனையாக இதை கருதுகிறோம். மீன்பிடித் தொழில் செய்துவந்த மீனவர்களையும், அவர்க ளது விசைப்படகையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

இது தொடர்பாக மத்திய, மாநில அரசுகளின் கவனத்தை ஈர்க்கும் வித மாக தருவைக்குளம் பொதுமக்கள் சார் பில் ஓரிரு நாளில் போராட்டங்களை அறிவிக்க இருக்கிறோம் என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் 'நடப்போம் நலம் பெறுவோம்' திட்டத்தை தொடங்கிவைத்தார் முதல்வர்

நடைபயிற்சி செய்யும் பழக்கத்தை பொதுமக்களிடம் ஊக்குவிக்கும் வகையில் 'நடப்போம் நலம் பெறுவோம்' என்ற சிறப்பு திட்டத்தை தமிழக சுகாதாரத் துறை செயல்படுத்துகிறது.

இன்று காலை 8 மணிக்கு சென்னை பெசன்ட் நகர் கடற்கரையில் இந்த திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார். ஏனைய மாவட்டங்களில் காணொலி மூலமாக தொடங்கி வைத்தார்.

இதையொட்டி, அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் 8 கிலோ மீற்றர் நீளத்துக்கு பிரத்யேகநடைபாதை அமைக்கப்பட்டுள்ளது.

சென்னை பெசன்ட் நகரில்டாக்டர் முத்துலட்சுமி பூங்காவில் தொடங்கி, பெசன்ட் நகர் அவென்யூ சாலை, எலியட்ஸ் கடற்கரை வரை இப்பாதை நீள்கிறது.



இங்கு வாகனங்கள் நிறுத்தம், ஓய்வு இருக்கைகள், கழிப்பறை உள் ளிட்ட வசதிகள் செய்யப்பட்டுள்ளன. செல்லப் பிராணிகளுடன் நடைபயிற்சி மேற்கொள்ளவும் வசதிசெய்யப்பட் டுள்ளது. மாதத்தின் முதல் ஞாயிற் றுக்கிழமை அன்று சென்னை மாநக ராட்சியுடன் இணைந்து ரத்த அழுத்தம், நீரிழிவு நோய் குறித்த மருத்துவ பரிசோ தனை முகாம் இங்கு நடத்தப்பட உள்ளது.

# காசாவில் அடைய முடியாத இலக்கை இஸ்ரேல் இராணுவம் விரட்டுகின்றது!

## – ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் தெரிவிப்பு




பாலஸ்தீனத்தின் காசா பகுதியில் அடைய முடியாத இலக்கினை அடைய இஸ்ரேல் கடந்த ஒரு மாத காலமாக முயற்சித்து வருகிறது என ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் சையத் ஹசன் நஸ்ரல்லா தெரிவித்துள்ளார்.

லெபனானின் தலைநகரில் அதிகளவான மக்கள் கூடியிருந்த இடத்தில் காணொலி மூலம் அவர் பேசி இருந்தார்.

கடந்த மாதம் 7 ஆம் திகதி இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பு திடீர் தாக்குதல் நடத்தியது. தொடர்ந்து தெற்கு இஸ்ரேலில் பகுதியில் இருந்த மக்களில் நூற்றுக்கணக்கானோரை பணயக் கைதிகளாக சிறை பிடித்து சென்றது.

இதையடுத்து இஸ்ரேல் தரப்பில் பாலஸ்தீனத்தின் காசாவை குறிவைத்து பதில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. காசா தான் ஹமாஸ் அமைப்பினர் இயங்கும் பகுதியாக உள்ளது. இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

இந்த சூழலில் ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் சையத் ஹசன் நஸ்ரல்லா, இஸ்ரேல் – ஹமாஸ் மோதல் குறித்து முதல் முறையாக பொதுவெளியில் கருத்து தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேலில் இடம்பெற்ற தாக்குதலுக்கு பின்னால் பலத்த திட்டமிடல் உள்ளது. ரகசியம் காத்தது தான் இந்த திட்டம் வெற்றி பெற காரணம். மேலும், இஸ்ரேலின் பலவீனத்தை இது காட்டுகிறது. இதில் எங்களது பங்கு எதுவும் இல்லை.

சுமார் ஒரு மாத காலமாக இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. ஆனால், இராணுவ ரீதியாக அதில் எந்தவொரு சாதனையையும் இஸ்ரேல் தரப்பு பெறவில்லை.

காசாவில் அடைய முடியாத இலக்கை இஸ்ரேல் விரட்டுகிறது. பேச்சுவார்த்தை மூலமாக மட்டுமே இஸ்ரேல் பணயக் கைதிகளை திரும்ப பெற முடியும் என்று

# நேபாளத்தில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 140 ஆக அதிகரிப்பு

## – மீட்பு, நிவாரணப் பணிகள் தீவிரம்

நேபாளத்தில் நேற்று நள்ளிரவில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் கட்டட இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 140 ஆக அதிகரித்துள்ளது. பலர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக கப்பட்டுள்ளனர்.

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இடிபாடுகளில் இன்னும் பலர் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது எனவும் பலி எண்ணிகை அதிகரிக்கலாம் என்றும் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ள குழுவினர் தெரிவிக்கின்றனர். வீடுகளை இழந்தோர் நிவாரண முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

நேபாளத்தின் மேற்குப் பகுதியில் நேற்று நள்ளிரவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. சுமார் 1 நிமிடத்துக்கு மேல்



நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது. இது ரிக்டர் அளவுகோலில் 6.4 ஆக பதிவானது. நிலநடுக்கம் ஜோஜர்கோட் பகுதியில் லாமிடண்டா எனுமிடத்தில் மையம் கொண்டிருந்தது என தேசிய நிலநடுக்க அளவீடு மையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நேபாள பிரதமர் புஷ்ப கமல் தாஹல், நாட்டின் முப்படைகளும் மீட்பு, நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுத்தப்பட்டுள்ளன என்று கூறியுள்ளார்.

ஜோஜர்கோட்டுடன் தைலேக், சல்யான் மற்றும் ரோல்பா மாவட்டங்களிலும் பாதிப்பு அதிகமாக ஏற்பட்டுள்ளது என உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த 30 நாட்களில் மூன்றாவது முறையாக நேபாளத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. நேற்று ஏற்பட்ட நிலநடுக்கத்தின் தாக்கம் இந்தியத் தலைநகர் டில்லி உள்பட நொய்டா, பாட்னா ஆகிய நகரங்களிலும் உணரப்பட்டது.

இமாலய மலையில் அமைந்துள்ள பகுதிகளில் நிலநடுக்கம் ஏற்படுவது வழக்கமானதாகவே இருக்கின்றது. அந்த வகையில் நேபாளத்திலும் அவ்வப்போது நிலநடுக்கங்கள் ஏற்படுவதுண்டு. கடைசியாக கடந்த 2015 ஆம் ஆண்டு 7.8 ரிக்டர் அளவில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் சிக்கி 12 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். 10 லட்சம் கட்டடங்கள் தரைமட்டமாகின என்பது நினைவுகூரத்தக்கது.